## நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.7, கோயம்புத்தூர்.

முன்னிலை: திரு.K. இந்திரஜித்,B.A.,M.L.,
நீதித்துறை நடுவர் எண்.7,
கோயம்புத்தூர்

குற்றப் பல்வகை மனு எண்: 8219/2026

**in**

**Crime No**.206/2026

2026 ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 10 ம் நாள் திங்கள் கிழமை

வீர ராகுல் (24) த/பெ.லட்சுமணன்
கதவு எண். 2/186, நடுத்தெரு, குண்டலகுத்தூர் கே,
சொக்கலிங்கபுரம், விருதுநகர்,
தமிழ்நாடு - 626202.

...மனுதாரர்/3 தரப்பினர்/ சொத்தின் உரிமையாளர்

/எதிர்/

அரசுக்காக.
காவல் ஆய்வாளர்,
டி4 குனியமுத்தூர் காவல் நிலையம்,
கோயம்புத்தூர்.
குற்ற எண். 206/2026,
u/s 331(4), 305(a) BNS .... எதிர்மனுதாரர்/புகார்தாரர்

### உத்தரவு

1) இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தான TN 67 BM 6500 என்ற பதிவு எண் கொண்ட சிவப்பு நிற Royal Enfiled, Vechicle Engine Number: J3A5FBN2560638, Vehicle Chassis Number: ME3J3C5FBN2013833 என்ற இருசக்கர வாகனம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த வழக்கு சொத்தை தம் வசம் இடைக்கால பாதுகாப்பில் திருப்பிக் கொடுக்கக்கோரி 497 உடனிணைந்த 503 BNSS ACT, 2023-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) மனுதாரர் தரப்பில் தான் வழக்குச் சொத்தின் உரிமையாளர் என்றும், மேற்படி குற்ற வழக்கில் எதிரிகளை கைது செய்யும் போது மேற்படி தனது TN 67 BM 6500 என்ற பதிவு எண் கொண்ட சிவப்பு நிற Royal Enfiled, Vechicle Engine Number: J3A5FBN2560638, Vehicle Chassis Number: ME3J3C5FBN2013833 என்ற இருசக்கர வாகனம் மேற்படி காவல் நிலையத்தாரால் கைப்பற்றப்பட்டு கடந்த 26 நாட்களாகக் காவல்துறையினரின் கட்டுப்பாட்டில் உள்ளது என்றும், மனுதாரர்/3 தரப்பினர்/ சொத்தின் உரிமையாளர் கல்லூரி மாணவர் என்றும், மனுதாரரின் போக்குவரத்து முழுமையாக வாகனத்தைச் சார்ந்திருப்பதால், அவர் ஈடுசெய்ய முடியாத காயத் துன்பங்களுக்கு ஆளாவார் என்றும், மேற்படி வழக்கில் கைப்பற்றப்பட்ட தனது இருசக்கர வாகனத்தை தன்னிடம் ஒப்படைக்காவிட்டால் மழையிலும், வெயிலிலும் பழுதாகக் கூடும் என்பதால் மேற்படி தனது இருசக்கர வாகனத்தை தன்னிடம் ஒப்படைக்க உத்தரவு பிறப்பிக்குமாறு மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3) அரசு தரப்பில் வழக்கில் சம்மந்தப்பட்ட வாகனமான TTN 67 BM 6500 என்ற பதிவு எண் கொண்ட சிவப்பு நிற Royal Enfiled, இரு சக்கர வாகனத்தை திரும்ப உரிமையாளரிடம் கொடுக்கும் பட்சத்தில் வழக்கு விசாரணையின் போது பாதிப்பு அடையாளம் என்பதாலும் வழக்கு சொத்தினை உரிமையாளருக்கு திரும்ப ஒப்படைக்க கடும் ஆட்சேபனை தெரிவிக்கப்படுகிறது.

4) வழக்கு சொத்தான TN 67 BM 6500 என்ற பதிவு எண் கொண்ட சிவப்பு நிற Royal Enfiled, Vechicle Engine Number: J3A5FBN2560638, Vehicle Chassis Number: ME3J3C5FBN2013833 என்ற இருசக்கர வாகனம் மனுதாரருக்கு சொந்தமானது என்பதாலும், வழக்குச் சொத்தின் உரிமையாளர் மனுதாரர்தான் என்று நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்கள் மூலம் உறுதிப்படுத்தப்படுவதாலும், மேற்படி வழக்குச் சொத்தை மனுதாரர் வசம் கீழ்கண்ட நிபந்தனைகளின் பேரில் இடைக்கால பாதுகாப்பில் திருப்பிக் கொடுக்க இந்நீதிமன்றம் உத்தரவிடுகின்றது.

.

1. மனுதாரர் ரூ.2,50,000/- க்கு பிணைப்பத்திரம் எழுதிக்கொடுக்க வேண்டும். 1,00,000 ற்கு இரு நபர்கள் பிணைப் பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும். அதில் ஒருவர் உள்ளூர் வாசியாகவும், மற்றொருவர் இரத்த சொந்தமாகஇருக்க வேண்டும்
2. வழக்குச் சொத்தை விற்கவோ மாற்றவோ கூடாது.
3. நீதிமன்றம் வேண்டும்போது வழக்குச் சொத்தை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவேண்டும்.
4. வழக்குச் சொத்தின் புகைப்படத்தின் பின்புறம் மனுதாரரின் கையொப்பம் பெற்றும், பிரிவு 65 B Bharathiya Sakshya Adhiniyam, 2023 இந்திய சாட்சிய சட்டத்தின்படியான சான்றிதழ் ஆகிய வற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும்
5. வழக்குச் சொத்தைப் பொருத்து தலைமை எழுத்தர் அவர்களால் Panchanama ஒன்று தயார் செய்யப்படவேண்டும்.

இவ்வுத்தரவு என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026 ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 10 ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

**(ஒப்பம்/ K . இந்திரஜித்)**

நீதித்துறை நடுவர் எண்.VII,
கோயம்புத்தூர்.